**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.875/2024

DEPOSITION OF WITNESS FOR PW-1

| | | |
|---|---|---|
| NAME | : | திரு.வெயில் முத்து |
| Father/ Husband NAME | : | திரு.வெயில்முத்து |
| VILLAGE | : | பனிக்கர்குளம் |
| TALUK | : | தூாத்துக்குடி |
| CALLING | : | 3ம் மனுதாரர் |
| AGE | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of November 2025.

முதல் விசாரணை :–

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.1**. பிரேத பரிசோதனை அறிக்கை **ம.சா.ஆ.2**. வாரிசு சான்றிதழ் **ம.சா.ஆ.3**. கயத்தாறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் வழங்கப்பட்ட பணிச்சான்று அசல் **மா.சா.ஆ.4**. கயத்தாறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் சம்பளச்சான்று **மா.சா.ஆ.5**. இறந்தவெயில் முத்து வங்கிகணக்குபுத்தகம் **மா.சா.ஆ.6**. மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல் **மா.சா.ஆ.7**. இறந்த வெயில்முத்து ஓட்டுநனர் உரிமம் **மா.சா.ஆ.8**. மனுதாரர்களின்

பான்கார்டு நகல் **ம.சா.ஆ.9**. மனுதாரர்களின் வங்கிக்கணக்கு புத்தகம் நகல்கள் **மா.சா.ஆ.10**. மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

**<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

விபத்தில் இறந்துபோன வெயில்முத்து எனது தகப்பனார் என்றால் சரிதான். நான் சொல்வது போன்று எனது தகப்பனார் பால் உற்பத்தி சங்கத்தில் வேலை பார்த்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணத்தின்படி எனது தகப்பனார் மாதம் ரூ.5900/- வாங்கியதாக துலங்குகிறது என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எனது மனுவிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளவாறு விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது தகப்பனார் ஓட்டிச்சென்ற டிரக்டரின் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் சாலைவிதிகளை கடைபிடிக்காமல் திடீரென பிரேக் பிடித்தால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் எனது தகப்பனாரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் சாலைவிதிகளை கடைபிடித்து மெதுவாக தான் வந்தார்என்றும் அவரது கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது தகப்பனாரின் கவனக்குறைவால் நடைபெற்றதால் இந்த எதிர்மனுதாரர்கள் எந்த நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஓட்டிச்சென்ற டிரெக்டரின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சேர்க்காததால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

நாங்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகப்படியான நஷ்டஈடு கோரியுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.